**1.4.2015**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி தமிழகத்தில் மழை வாய்ப்பு</u>

வளி மண்டலத்தின் மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள சுழற்யின் காரணமாக தமிழகத்தின் அடுத்த சில நாள்களுக்கு மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கோடை காலம் தொடங்கியுள்ளது. இதனால் பல இடங்களில் அதிகப்படியான வெயில் பதிவாகி வருகிறது. ஆனால் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழகம் முழுவதும் அடுத்து சில நாள்களுக்கு மழை பெய்ய வாய்ப்பேற்பட்டுள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: லட்சத் தீவுகளுக்கு அருகில் வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கடந்த இரு நாள்களாக தமிழகம் முழுவதும் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்த சுழற்சியின் காரணமாக ஏப்ரல் 3-ஆம் தேதி வரை தமிழகத்தில் மழை பெய்யும் என்று தெரிவித்தனர். வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுவையில் ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ புதன்கிழமை பெய்யும். சென்னையை பொருத்த வரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். முத்துப்பேட்டையில் 100 மி.மீ. மழை: இந்த நிலையில் திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் 100 மி.மீ. மழை பெய்துள்ளது. தூத்துக்குடியில் 30 மி.மீ. மழையும் நாகர்கோயிலில் 20 மி.மீ. மழையும் பெய்துள்ளது. சிவகிரி, பேச்சிப்பாறை, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், பூதபாண்டி ஆகிய இடங்களில் 10 மி.மீ. மழை பெய்துள்ளது.

**விருதுநகர் மாவட்டத்தில் தானிய சாகுபடியை அதிகரிக்கும் வகையில் சிறு குறு விவசாயிகளுக்கு பயிற்சி**

விருதுநகர் மாவட்டப் பகுதி கிராமங்களில் தானிய பயிர் சாகுபடியை அதிகரிக்கவும், மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரித்தல் தொடர்பாகவும் சிறு தானிய மகளிர் குழுக்களுக்கு வேளாண்மைத்துறை மூலம் பயிற்சி அளிக்கப்பட இருப்பதாக வேளாண்மை துறை இணை இயக்குநர் தெரிவித்தார்.

இம்மாவட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள் தானிய பயிரிடுவதில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். இதுபோன்ற காரணங்களால் இப்பகுதியில் வறட்சியை தாங்கி வளரக்கூடிய வரகு, பணிவரகு, கேழ்வரகு மற்றும் தினை உள்ளிட்ட பயிர்களை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையில் வேளாண்மைத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். முதல் கட்டமாக வேளாண்மை வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலம் ஒவ்வொரு கிராமங்களிலும் விவசாய குழுக்கள் அமைத்து முழுமையான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல், ஒவ்வொரு விவசாயிக்கும் எந்தெந்த வகையான தானியங்களை பயிரிட்டால் அதிக மகசூல் பெறலாம் என்பது தொடர்பாக சிறு குறுவிவசாயிகளுக்கு நீர்வள நிலவளத்திட்டம் சார்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதேபோல், தானியங்களில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பது தொடர்பாகவும் சிறுதானிய மகளிர் குழுக்கள் தொடங்கி பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் வரகு, பணிவரகு, கேழ்வரகு மற்றும் தினை ஆகிய தானியங்களை பிரித்தெடுத்து மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பது என்பதும், சந்தைப்படுத்தும் முறை குறித்தும் விளக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது. அவ்வகையில் இம்மாவட்டத்தில் 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் தொடங்கப்பட்டுள்ள சிறுதானிய மகளிர் குழுக்களுக்கு தலா 1 நவீன இயந்திரமும், வத்திராயிருப்பு ஒன்றியத்திற்கு மட்டும் 2 நவீன இயந்திரமும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விதை சுத்தகரிப்பு செய்தல், இயற்கை உரங்கள் தயார் செய்தல், தானியங்களில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரித்தல் போன்றவைகளில் கூடுதல் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. சிறுதானிய

மகளிர் குழுக்களும் வேலையில்லாத காலங்களிலும் தானியம் சார்ந்த தொழில்கள் செய்து மகளிர் குழுவினரும் குடும்பத்திற்கான வருவாயை ஈட்டும் வகையில் இத்திட்டம் மூலம் தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக வேளாண்மை துறை இணை இயக்குநர் கே.சுப்பையா தெரிவித்தார்.

**உழுதவன் கணக்குப் பார்த்தால்...**

ராஜஸ்தான் மாநிலத்தில் மழையால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களைப் பார்வையிட்டபோது பலத்தமழை, புயல் உள்ளிட்ட இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை உயர்த்துவது குறித்து மாநில அரசுகளுடன் கலந்து பேசி, முடிவு காணப்படும் என்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி கூறியிருக்கிறார். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர்கால நிவாரண நிதியிலிருந்து பயிரின் வகைப்பாடு, பாதிப்பின் அளவு இவற்றுக்கு ஏற்ப விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது. மானாவாரிப் பயிர் என்றால் ஹெக்டேருக்கு ரூ.4,500, பாசன சாகுபடி என்றால் ரூ.9,000, மா, தென்னை, முந்திரி போன்ற நிலைத்த பயிர்களுக்கு ரூ.12,000 என நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், இதே அளவுகோலின் படி விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைப்பதில்லை. காரணம், இழப்பை மதிப்பீடு செய்யும்போது, குறைத்தே மதிப்பிடுகிறார்கள். பயிர் பாதிப்பின் அளவைத் தீர்மானிப்பதென்பது அதிகாரிகளின் ஆதிக்கமாக இருப்பதால், இதில் விவசாயிகளுக்கேற்பவும், அரசியல் அழுத்தங்களுக்கு ஏற்பவும் மதிப்பீடு மாறுகிறது. பேரிடர் கால இழப்பீட்டில் முழுமையாக இழப்பீடு வழங்குவதென்பது சாத்தியமே இல்லை. இழந்தவன் சொல்லும் கணக்கு எப்போதுமே உயர்வாகத்தான் இருக்கும். இருப்பினும் நடைமுறைக்கு இயலாதபடி இழப்பீட்டுத் தொகை அமைகின்றன என்பதுதான் உண்மை நிலை. இழப்பீட்டுத் தொகையை உயர்த்துவது என்பது இன்றியமையாதது. அத்துடன் இந்த இழப்பீடுகளைப் பயிர்வாரியாக எவ்வாறு கணக்கிட வேண்டும் என்பதற்கு அரசு ஒரு துல்லியமான மதிப்பீடு அட்டவணையை உருவாக்கி, அதன் விவரம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தெரியும்படி செய்ய வேண்டும். அப்போதுதான் விவசாயிகள் தாங்கள் ஏமாற்றப்படவில்லை என்று ஆறுதல்

அடைவார்கள். அதேவேளையில், விவசாயிகளுக்கான தேசியக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டிய அவசியமும் உருவாகியிருக்கிறது. விவசாயிகளின் குறைகளைக் களையும் நோக்கோடு அமைக்கப்பட்ட விவசாயிகளுக்கான தேசிய ஆணையம் 2007ம் ஆண்டு அளித்த அறிக்கையில், இந்திய வேளாண்மையை உற்பத்தி சார்ந்ததாக இல்லாமல், வருவாய் சார்ந்ததாக மாற்ற வேண்டும்; இதற்கேற்ப வேளாண் கொள்கை அமைய வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது. ஆனால் இதுவரை அது நடைமுறைக்கு வரவே இல்லை. விவசாயியின் உற்பத்திக்கும் வருவாய்க்கும் தொடர்பே இல்லாத நிலை நீடிக்கிறது. ஒரு குவிண்டால் நெல்லுக்கான ஆதார விலை ரூ.1,400. தமிழ்நாடு அரசின் ஆதார விலை ரூ.70. மொத்தம் ரூ.1,470. அதாவது ஒரு கிலோ நெல் விளைவிக்க ஆகும் செலவு ரூ.14.70 என்கிறார்கள். ஆனால் அதே நெல், உமி நீக்கப்பட்ட பின்னர், கிலோ அரிசி ரூ.45க்கு விற்கப்படுகிறது. 200% லாபம்! இதே ஒரு கிலோ நெல் ரூ.22.50-க்கு கொள்முதல் செய்யப்பட்டாலும் அரிசி வியாபாரிக்கு 100% லாபம் கிடைக்குமே! ஏன் விவசாயிக்கு மட்டும் குறைத்து மதிப்பிடப்படுகிறது? விவசாய உற்பத்திச் செலவு அனைத்துமே உயர்ந்துவிட்டன. உரம், பூச்சிகொல்லி மருந்துகள், விதை, சாகுபடி செலவு, அறுவடைச் செலவு, களத்திலிருந்து வீட்டுக்கு அல்லது கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு செல்லும் வாடகை என எல்லாமும் கூடிக்கொண்டே இருக்கின்றன. உழுதவன் கணக்குப் பார்த்தால் என்றில்லை, பார்க்காமலேயே ஒன்றும் இருக்காது என்பதை உணர முடியும். விவசாயிகளின் வேளாண் செலவு மட்டுமே கணக்கில் கொள்ளப்படுகிறது. இதில் விவசாயியின் தனிப்பட்ட உழைப்பு, அந்த வேளாண் நிலத்தின் மதிப்பு ஆகியவை கணக்கில் கொள்ளப்படுவதில்லை. விவசாயிகளுக்கான தேசிய ஆணையம் தனது பரிந்துரையில், விவசாயத்தை வருவாய் சார்ந்ததாக மாற்ற வலியுறுத்தி இருக்கிறது. உற்பத்திச் செலவின் 50% தொகையைக் கூட்டி, ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று வேளாண் அறிஞர் எம்.எஸ். சாமிநாதன் அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இந்த ஆணையம் தனது பரிந்துரையில்

விவசாயக் கடன் 4% வட்டியில் வழங்க வேண்டும் என்றும், பண்ணை சாரா தொழில்களாக அவர்கள் உற்பத்தி செய்யும் சாகுபடியை மதிப்பூட்டும் தொழில்களில் அவர்களே ஈடுபடும் நிலை உருவாக வேண்டும் என்றும்கூட குறிப்பிட்டிருந்ததாக அவர் கூறியிருந்தார். நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளின் நிலை இதுவென்றால், கரும்புச் சாகுபடி செய்வோரின் நிலை இன்னும் மோசம். அவர்கள் விளைவித்துத் தரும் கரும்புக்கு முழுத் தொகையையும் ஆலைகள் உடனே கொடுப்பதில்லை. இத்தனைக்கும், சர்க்கரை ஆலைகள் அனைத்துமே லாபத்தில்தான் இயங்குகின்றன. இருப்பினும்கூட விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை தராமல் இழுத்தடிக்கிறார்கள். சர்க்கரையைக் காட்டிலும், சாராய உற்பத்திக்கு அடிப்படையான மொலாசஸ் மூலம் சர்க்கரை ஆலைகள் ஈட்டும் லாபம் தனிக் கணக்கு. அதில் தங்களுக்கும் பங்கு தர வேண்டும் என்றும் விவசாயிகள் கோரி வருகின்றனர். அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை. எந்த மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை எடுத்துக்கொண்டாலும், சர்க்கரை ஆலைகள் பணம் பட்டுவாடா செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இல்லாமல் இல்லை. விவசாயிகளும் எல்லாவிதமான போராட்டங்களையும் நடத்திப் பார்க்கிறார்கள். ஆட்சியர்களும் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார்கள். ஆனால் எதுவுமே நடப்பதில்லை. அரசு ஊழியர்களும் வங்கி ஊழியர்களும் இரண்டு நாள் சேர்ந்தாற்போல வேலைநிறுத்தம் செய்தால் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுகிறது. ஆனால் விவசாயி என்னதான் கத்தினாலும் அழுது புரண்டாலும் ஒன்றும் விளைவதில்லை. ஆனாலும் அவன் விளைவித்துக்கொண்டே இருக்கிறான். அடுத்தவர் உண்பதற்காக!

## <u>கோடை வெப்பத்தை தணிக்கும் கிர்ணிப்பழ விற்பனை அமோகம்</u>

கோடை வெப்பத்தின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் காஞ்சிபுரத்தில் கிர்ணிப்பழ விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மார்ச் மாத ஆரம்பத்தில் இருந்தே கோடை வெப்பம் வாட்டி வதைத்து வருகிறது. நாளுக்கு நாள் வெப்பத்தின் அளவு அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் தங்களைக் காக்கும் வகையில் தர்பூசணி,

கிர்ணிப்பழம், வெள்ளரி, இளநீர், இயற்கை பழங்கள், குளிர்பானங்களையும், குளிரூட்டப்பட்ட செயற்கை குளிர்பானங்களையும் பருகி தங்கள் தாகம் தணித்து வருகின்றனர். குறிப்பாக இப்பகுதியில் கிர்ணிப்பழம் விற்பனை அதிகரித்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரந்தூர், கோவிந்தவாடி உள்ளிட்ட பகுதிகளில் விளைவிக்கப்படும் கிர்ணிப்பழம், மாட்டு வண்டிகள் மூலம் கொண்டு சென்று வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். ஒரு பழம் ரூ. 20 முதல் ரூ. 50 வரை விற்பனை செய்யப்படுகிறது. நீர்ச் சத்து அதிகம் உள்ள தர்பூசணி, வெள்ளரி ஆகியவற்றின் வரிசையில் கிர்ணிப்பழம் முக்கிய இடம் பிடிப்பதால், மக்கள் இவற்றை ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். மேலும் ரயில்வே சாலை, வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட நகரின் முக்கியப் பகுதிகளில் கிர்ணிப்பழச் சாறு அதிக அளவில் விற்பனையாகிறது. ஒரு கோப்பை கிர்ணப்பழச் சாறு ரூ. 10-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**<u>பழனியில் வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி</u>**

பழனியில் வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் நடைபெற்ற முகாமுக்கு பழனி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி வரவேற்றார். வேளாண் துணை இயக்குநர் தங்கச்சாமி தலைமை வகித்து திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மானியத்திட்டம் பற்றியும், சிக்கன நீர்ப்பாசன முறை பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். சென்னை நீர்வள, நிலவளத் திட்ட ஆலோசகர் தயாநிதி பயிற்சி அளித்தார். முகாம் ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் கணேசன் தலைமையில் துணை வேளாண் அலுவலர் துரைச்சாமி, அட்மா மணிகண்டராஜ், ஜெகநாதன் ஆகியோர் செய்திருந்தனர். தொழில்முனைவோர் மேம்பாட்டு கருத்தரங்கம்: பழனி அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் தொழில் முனைவோர் மேம்பாட்டு கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் கந்தசாமி தலைமை வகித்தார். திண்டுக்கல் வின்னர் பயிற்சி அகாதெமி இயக்குநர் ஜீவானந்தம், முதன்மை பயிற்சியாளர் நர்மதா ஆகியோர் பெண்கள்

முன்னேற்றம் குறித்து உரை நிகழ்த்தினர். கருத்தரங்கில் சிறுகுறு தொழில் செய்வோர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டம், மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கப்படும் கடனுதவி, தமிழக அரசு மற்றும் மத்திய அரசு கடனுதவிகளில் மானியம் குறித்து சிறுகுறு தொழில் அதிபர்கள் சங்க செயலர் அண்ணாத்துரை விளக்கினார். கருத்தரங்கம்: பழனி அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான ஒருநாள் கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கருத்தரங்குக்கு முதல்வர்(பொறுப்பு) ஞானசேகரன் தலைமை வகித்தார். கல்லூரி அக தர நிர்ணயக்குழு உறுப்பினர் இணைப் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் மோகன் முன்னிலை வகித்தார். கோவை ஸ்ரீராமகிருஷ்ணா வித்யாலயா மிஷன் கல்வியியல் கல்லூரி முதல்வர் முத்தையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். ஒருங்கிணைப்பாளர் ராஜரத்தினம் நன்றி கூறினார்.

## <u>விவசாயிகளுக்கு மானியம் வழங்கல்</u>

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில், விவசாயிகளுக்கு மானிய உதவியை ஆட்சியர் ந.வெங்கடாச்சலம் வழங்கினார். தோட்டக்கலைத் துறை சார்பில் 5 விவசாயிகளுக்கு வேளாண்மை உபகரணங்கள் மற்றும் இடுபொருள்கள் மானியமாக வழங்கப்பட்டன. மக்கள் குறைதீர் கூட்டத்தில் பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, 15 நாள்களுக்குள் மனுதாரருக்கு பதிலளிக்க வேண்டும் என்று ஆட்சியர் உத்தரவிட்டார். மாவட்ட வருவாய் அலுவலர் செ.பொன்னம்மாள், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் அஜினா பாத்திமா உள்ளிட்டோர்கலந்துகொண்டனர்.

## <u>குண்டேரிப்பள்ளம் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு</u>

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், குண்டேரிப்பள்ளம் அணையில் இருந்து பாசனத்திற்காக திங்கள்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர், திருப்பூர் மக்களவை உறுப்பினர் வி.சத்தியபாமா

ஆகியோர் அணையில் இருந்து தண்ணீரைத் திறந்துவிட்டனர். அதன்பின், மாவட்ட ஆட்சியர் கூறியதாவது: குண்டேரிப்பள்ளம் அணையில் இருந்து மார்ச் 30-ஆம் தேதி முதல் ஜூன் 6-ஆம் தேதி வரை 42 நாள்களுக்கு புன்செய் பாசனத்திற்காக 4 கட்டங்களாக தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தற்போது அணையின் நீர் மட்டம் 105.17 அடியாக உள்ளது. முதல் கட்டமாக மார்ச் 30-ஆம் தேதி முதல் ஏப்ரல் 11-ஆம் தேதி வரை விநாடிக்கு 20 கன அடி வீதம் 12 நாள்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும். இரண்டாம் கட்டமாக ஏப்ரல் 19-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை விநாடிக்கு 24 கன அடி வீதம் 10 நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். மூன்றாம் கட்டமாக மே 7-ஆம் தேதி முதல் 17-ஆம் தேதி வரை விநாடிக்கு 24 கன அடி வீதம் 10 நாள்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும். நான்காம் கட்டமாக மே 22-ஆம் தேதி முதல் ஜூன் 4-ஆம் தேதி வரை விநாடிக்கு 24 கன அடி வீதம் 10 நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். இந்த தண்ணீர் மூலமாக கொங்கர்பாளையம், வாணிப்புத்தூர், கவுண்டம்பாளையம், புஞ்சைதுறையம்பாளையம், அரக்கன்கோட்டை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 2,498 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றார். இந்நிகழ்ச்சியில், கோபி சார் ஆட்சியர் எச்.கிருஷ்ணன் உண்ணி, நீர்வள ஆதாரத் துறை செயற்பொறியாளர் நடராஜன், உதவி செயற்பொறியாளர் ராமசாமி, உதவிப் பொறியாளர் செந்தில்குமார், கோபி வட்டாட்சியர் அசோக்குமார், கோபி நகர்மன்ற உறுப்பினரும் அதிமுக நகரச் செயலாளருமான சையத்புடான்ஸா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## இந்தியாவுடனான வர்த்தகத்தை அதிகரிக்க ஜெர்மனி திட்டம்

இந்தியாவுடனான வர்த்தகத்தை அதிகரிக்க ஜெர்மனி திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டின் பேவேரியன் மாகாண வேளாண் அமைச்சர் ஹெல்மெட் பர்னர் தெரிவித்தார். பெங்களூரு வயாலிகாவலில் செவ்வாய்க்கிழமை பேவேரியன் உணவுத் திருவிழாவைத் தொடக்கிவைத்து அவர் பேசியது:

இந்தியாவுடன் ஜெர்மனி வர்த்தக ரீதியாகவும், உணவு ரீதியாகவும் பாரம்பரியமாக தொடர்பு கொண்டுள்ளது. இந்தியாவில் குறைந்த விலையில் சத்தான உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யவும், விற்பனை செய்யவும் ஜெர்மனி திட்டமிட்டுள்ளது. சிறந்தவைகளை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தை இந்தியர்கள் பெற்றுள்ளனர். வரும் நாள்களில் இந்தியாவில் ஏராளமான தொழில் முதலீட்டை செய்யவும் முடிவு செய்துள்ளோம் என்றார். நிகழ்ச்சியில் குட்புட் ஸ்டோர்ஸின் மூத்த செயல் அதிகாரி முரளிசங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு கரும்பு நிலுவைத் தொகை வழங்க நடவடிக்கை: அமைச்சர் மகாதேவ பிரசாத்

கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கர்நாடக கூட்டுறவு, சர்க்கரைத் துறை அமைச்சர் மகாதேவ பிரசாத் தெரிவித்தார். கர்நாடக சட்ட மேலவையில் செவ்வாய்க்கிழமை காங்கிரஸ் உறுப்பினர் மகந்தேஷ் சிவானந்த் கவுஜலகியின் கேள்விக்குப் பதிலளித்து அவர் கூறியது: கடந்த 2014-15 ஆம் நிதியாண்டில் 63 சர்க்கரை ஆலைகளில் 149 லட்சம் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டுள்ளது. 38.64 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகளுக்கு ரூ. 7827 கோடி நிலுவைத் தொகை நிலுவையில் உள்ளது. இதில் கரும்பு விவசாயிகளுக்கு இதுவரை ரூ. 5403 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையை சர்க்கரை ஆலைகள் விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த ஆண்டில் 11 மாவட்டங்களில் கரும்பு விவசாயத்திற்காக ரூ. 2387 கோடி கடனை பல்வேறு வங்கிகள் வழங்கியுள்ளன. இதனை அரசு தள்ளுபடி செய்யுமா? என உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார். அதுபோன்ற திட்டம் அரசிடம் எதுவுமில்லை. சர்க்கரை ஆலைகளிடமிருந்து நிலுவைத் தொகை பெறும் வரை கடனை அடைக்க விவசாயிகளை வங்கிகள் வற்புறுத்தக் கூடாது என்றார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தஞ்சாவூர் மாவட்டத்தில் 2.50 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்

தஞ்சாவூர்:மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தில், ஆண்டுதோறும், விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் முகம்மது பாதுஷா கூறியதாவது:நடப்பு காரீப் பருவத்துதில் (சம்பா, குறுவை, தாளடி) தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும், நான்கு லட்சத்து, 40 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்வதென, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.இதற்காக, தஞ்சாவூர், திருவையாறு, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம் தாலுகா பகுதிகளில், 404 நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.சம்பா பருவத்துக்கான அறுவடை முடிவுறும் தருவாயில் மார்ச், 30ம் தேதி வரை, விவசாயிகளிடமிருந்து, இரண்டு லட்சத்து, 50 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவை கடந்த காரீப் பருவத்தை விட, 40 சதவீதம் அதிகம். நெல் கொள்முதல் செய்த வகையில், அரசு நிர்ணயித்துள்ள ஆதார விலையுடன் ஊக்கத்தொகையும் சேர்த்து, டன் ஒன்றுக்கு, "ஏ' கிரேடு நெல் என்றால், 1,470 ரூபாய், சன்னரகம் என்றால், 1,410 ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு ரொக்கமாகவும், வங்கி பண பரிவர்த்தனை மூலமாகவும் உடனுக்குடன்பட்டுவாடாசெய்யப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

<u>மணக்கும் மல்லிகை... மயக்கும் வருமானம்</u>



கரும்பு பயிரிட்ட இடத்தில் தற்போது மல்லிகை தான் வருமானம் தந்து காக்கிறது, என்கிறார் மதுரை சத்திரப்பட்டி மஞ்சம்பட்டியைச் சேர்ந்த மல்லிகை விவசாயி ரெங்கநாதன். பி.எஸ்சி., இயற்பியல் படித்த இவர், மணக்கும் மல்லிகையின் மயக்கும் வருமானம் குறித்து அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். 15 ஆண்டுகளுக்கு முன் வரை, நெல், கரும்பு சாகுபடி தான் செய்து வந்தேன். மனைவி ராதாவின் திருச்சி வீட்டில் மல்லிகை சாகுபடி செய்த அனுபவத்தை கூறினார். முதலில் 50 சென்ட் இடத்தில், ராமேஸ்வரத்தில் இருந்து 3000 பதியன்களை வாங்கி வந்து நட்டேன். ஆறு மாதத்தில் பூக்க ஆரம்பித்தது. உரம், களை நிர்வாகம் செலவு பிடித்தது. ஆறுமாதம் கழித்து 10 கிலோ பூத்தது. ஓராண்டில் 20 கிலோ பூத்தது. கரும்பு நட்ட ஐந்து ஏக்கரையும் மல்லிகையாக மாற்றினேன். வெவ்வேறு நேரங்களில் பதியன் செய்ததால் தினமும் 100 - 200 கிலோ பூ வரத்து கிடைக்கிறது. தோட்டக்கலை உதவி இயக்குனர் காமராஜ், சொட்டுநீர் பாசனத்தை பற்றி சொன்னபோது, நூறு சதவீத மானியத்தில் ஒரு ஏக்கருக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்தேன். இன்னும் இரண்டு ஏக்கரில் சொட்டுநீர் பாசனம் அமைக்க உள்ளேன். நெல், கரும்பில் ஒருமடங்கு லாபம் என்றால் மல்லிகையில் மூன்று மடங்கு லாபம் கிடைக்கிறது. மல்லிகையில் நஷ்டம் என்று யாராவது சொன்னால் ஏற்றுக்கொள்ள மாட்டேன். செடிகளுக்கு தேவைப்படும் உரம், தண்ணீரை கொடுத்து கொண்டே இருப்பேன். இங்கே பெரியாறு பாசனம் என்பதோடு கால்வாய் என் தோட்டம் வழியாக தான் செல்கிறது. மல்லிகைக்கு அதிக தண்ணீர் தேவையில்லை. எனவே சிமென்ட் வாய்க்கால் அமைத்து, தண்ணீர் தோட்டத்திற்குள் வராமல்

பார்த்துக் கொண்டேன். ஆரம்பத்தில் வாரத்திற்கு ஒருமுறையும், தற்போது 15 நாட்களுக்கு ஒருமுறையும் தண்ணீர் விடுகிறேன். நவ, டிசம்பரில் கவாத்து எடுத்து எடுக்க வேண்டும். தரையில் படர்ந்து வளரும் நீர்போர்த்து கிளைகளை வெட்டிவிட வேண்டும். பூக்காமல் மேல்நோக்கி வளரும் செடிகளை கிள்ளிவிட வேண்டும். முறையாக பராமரித்தால் 15 ஆண்டுகள் வரை இப்பயிரில் இருந்து வருமானம் பார்க்கலாம். உற்பத்திக்காக கோவையில் ஹார்ட்டி இன்டெக்ஸ் அமைப்பின் தேசிய விருது கிடைத்தது பெருமைக்குரிய விஷயம் என்றார். இவரிடம் பேச: 90957 28851. **-எம்.எம்.ஜெயலட்சுமி, மதுரை.**

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>



**தென்னையில் ஊடுபயிர் மக்காச்சோளம்:** அனுபவ விவசாயி டி.தேவதாஸ், நர்மதாபுரம் சரல் அஞ்சல் - 629 203, குமரி மாவட்டம், வேளாண்துறை குருந்தன்கோடு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஏற்பாட்டில் மக்காச்சோள விதைகள் வாங்கி விவசாயி தனது தென்னந்தோப்பில் 50 சென்ட் நிலத்தில் தென்னைக்கு இடையே ஊடுபயிராக வரிசைப்படுத்தி, பாத்திகள் அமைத்து இடையே விதைகளை ஊன்றியதில் அனைத்தும் நன்கு முளைத்து வளர்ந்து காய்த்து 100 நாளில் அறுவடை செய்ததில் 50 கன்று தென்னந் தோப்பில் 100 கிலோ மக்காச்சோளம் கிடைத்துள்ளது. கிலோ ரூ.50க்கு விற்றதில் ரூ.3000 வருமானமும், இதன் தட்டைகளை தென்னைக்கு பசுந்தாள் உரமாகபயன்படுத்தியுள்ளார்.

**சீனாவின் தேசிய பழம் (கிவி) :** தமிழக மலைப்பகுதிகளில் விளைவிக்கலாம். சைனீஸ் ஸ்பெரி என்று அழைக்கப்படும் கிவியின் தாவரவியல் பெயர் ஆக்டனிடியா டெசிலிலோசா ஆகும். கொடி வகையான கிவி நீர்வளம் மிகுந்த உயரமான மலைப்பகுதிகளில் சாகுபடி செய்ய ஏற்றது. பழங்கள் நீளவட்ட வடிவில் சப்போட்டா போன்ற தோற்றத்துடன் இருக்கும். இதன் தோல்மீது சிறு ரோமங்கள் போன்று காணப்படும். பழங்களின் உட்புற சதைகள் பச்சை

நிறத்திலும் ஒரு பகுதியில் உள்ள விதைகள் கருப்பு நிறத்திலும் இருக்கும். பழுத்த பழங்கள் நறுமணம் கொண்டதாகவும் அதிக சத்துக்கள் மற்றும் மருத்துவ குணம் கொண்டதாகவும் இருக்கும். இப்பழங்களை தனியாகவோ, பிற பழங்களுடன் சேர்த்தோ சாப்பிடலாம். இப்பழத்தில் வைட்டமின் பி,சி, பாஸ்பரஸ், பொட்டாசியம், கால்சியம் ஆகியவை அதிக அளவில் உள்ளன. பழங்கள் மனித உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும்.இப்பயிர் சாகுபடிக்கு நல்ல வசதியுடன் கூடிய வண்டல் மண் மிகவும் ஏற்றது. கடல் மட்டத்திலிருந்து 900 முதல் 1800 மீட்டர் உயரத்தில் போதுமான மழை அதிக நீர்ப்பிடிப்பு உள்ள பகுதிகளில் நன்றாக வளரும். பொதுவாக பிப்ரவரி மாதத்தில் வேர் குச்சிகளில் மொட்டுக்கட்டுதல் அல்லது ஒட்டுக் கட்டுதல் மூலமாக பயிர் பெருக்கம் செய்யப்படுகிறது. கடினம் வாய்ந்த தண்டு குச்சிகள் மூலமாகவும் பயிர் பெருக்கம் செய்யலாம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு முகவரி : முனைவர் சோ.அசோக்குமார், முனைவர் ஜெ.ராஜாங்கம், முனைவர் பா.செந்தமிழ்செல்வி, முனைவர் இரா.முத்துச்செல்வி, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல். போன் : 04542 - 240 931.

**"பச்சை' எனப்படும் "மாசிப்பச்சை'** : மதுரைப்பகுதி விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளி ஏற்றிக் கொண்டிருக்கிறது என்கிறார் அனுபவ விவசாயி சி.மாயி. க.நல்லொச்சான்பட்டி கிராமம், மதுரை மாவட்டம் 50 சென்ட் நிலத்தில் மாதம் ரூபாய் 30 ஆயிரம் வருமானம் கிடைக்கிறது. மாசிப்பச்சையோட ஸ்பெஷல் "பச்சை' கலர் தான். பூ மாலை கட்டுவதில் பச்சைக் கலருக்காக பயன்படுத்துற மருதாணி, சவுக்கு, துளசி இலைகளை விட மாசிப்பச்சை போட விலை கம்மி. இதுமாலை தொடுக்கிறதுக்கும் சுலபமா இருக்கிறதால கல்யாண மாலை தவிர்த்து, மத்த எல்லா மாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. எனவே இதன் தேவை தினமும் இருக்கும். வைகாசி மாசத்துல பச்சையோட வரவு கம்மியா இருக்கும். மதுரையைச் சுற்றி இருக்கிற குருவித்துறை, உசிலம்பட்டி, செக்கானூரணி, மேலக்கால் பகுதியில் இதை அதிகளவு சாகுபடி செய்கிறார்கள். சாகுபடி நிலத்தை நன்றாக உழுது, பாத்தி எடுத்து மாசில் பச்சை செடியின்

தண்டுப்பகுதியை நடவு செய்தால் போதும். கொஞ்சம் நிழல் பாங்கான இடம் தேவை என்பதால் பாத்திகளின் கரைகளிலும், வாய்க்கால் கரைகளையும் சுற்றி அகத்தியை நடவு செய்யலாம். தண்ணீர் வசதியைப் பொறுத்து நிலத்தைக் காய விடாமல் பாசனம் செய்தால் போதுமானது. நடவு செய்த 45ம் நாளிலிருந்து அறுவடை செய்யத் தொடங்கலாம். ஒருமுடி ரூபாய் 5 முதல் 20 வரை விலை போகும். **- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**இயற்கை வழி வேளாண்மை முழுமையாக அறிய சில வழிகள்**

எங்கு பார்த்தாலும் இயற்கை விவசாயம் எனும் அங்கக விவசாயம் பற்றிய பேச்சாக இருக்கிறது. கேரள அரசு 2016ல் தங்கள் மாநிலம் "இயற்கை விவசாய மாநிலம்" ஆகும் என அறிவித்து விட்டது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இயற்கை விவசாய பயிற்சிகள் அளிக்க தொடங்கி விட்டது. இந்த இயற்கை வழி விவசாயம் பற்றி அறிய என்ன செய்ய வேண்டும். இதன் நுட்பங்கள் எவை? என அறிவோம். இதன் பிரிவுகள். இயற்கை வேளாண் தொழில்நுட்பங்கள், உயிராற்றல் வேளாண்மை, மக்கு உர உத்திகள், உரம் அல்லது எருவிடுதல், பயிர் பாதுகாப்பு, அங்கக சான்றளிப்பு, அறுவடை சார் தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்துதல் என பல பிரிவுகள் உள்ளன. **முழுமையாக அறிய** : www.agritech.tnau.ac.in பாருங்கள். அகில இந்திய அங்கக விவசாயிகள் சங்கம் www.aiosidia.com பார்த்து உறுப்பினர் ஆகிடுங்கள். www.tnucd.net, www.ofai.org, www.ams.usda.gov, www.nabard.org ஆகிய வலைத்தளம் பாருங்கள். பயிற்சி பெறுங்கள். இயற்கை வழி வேளாண்மை தொடங்குங்கள்.- எம்.ஞானசேகர், விவசாய ஆலோசகர் 93807 55629

**விதை முளைப்புத்திறனை அறிந்து பயிரிட விவசாயிகளுக்கு அறிவுரை**

திருவள்ளூர்: "திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள், நெல்லில் குறைந்த செலவில் அதிகம் லாபம் பெற, விதை முளைப்புத் திறன் அறிந்து பயிரிட வேண்டும்," என, வேளாண் துறையினர் அறிவுரை வழங்கியுள்ளனர். திருவள்ளூர் மாவட்ட வேளாண் விதை பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண் அலுவலர் ஞானசேகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில், தற்போது

சொர்ணவாரி பருவத்தில் தண்ணீர் பற்றாக்குறையால் குறைவான பரப்பில் சாகுபடி செய்தாலும், வெயில் அதிகமாக உள்ளதால், நெற்பயிரில் அதிகளவு ஒளிச்சேர்க்கை ஏற்பட்டு, அதிக மகசூல் கிடைக்கும். இப்பருவத்தில் விதைப்பதற்கு முன், விதையின் முளைப்புத் திறனை அறிந்து விதைத்தால், குறைந்த விதையில் அதிக மகசூல் கிடைக்கும். விதையின் முளைப்புத் திறன், 80 சதவீதம் இருக்க வேண்டும். எனவே, விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் முளைப்புத் திறனை அறிந்து கொள்ள, திருவள்ளூர் பெரியகுப்பம், ஆயில் மில் பேருந்து நிறுத்தம் அருகில் செயல்பட்டு வரும் விதை பரிசோதனை அலுவலகத்திற்கு வந்து, 400 கிராம் அளவில் விதை மாதிரியினை வழங்கி அறிந்து கொள்ளலாம்; இதற்கு கட்டணம், 30 ரூபாய். விதை மாதிரி கிடைத்த, 14 நாட்களில் பரிசோதனை முடிவுகள் வழங்கப்படும். இவ்வாறு, அதில் கூறப்பட்டு உள்ளது.

## பேச்சிப்பாறை அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு

நாகர்கோவில்,: கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. மாவட்ட தலைநகர் நாகர்கோவிலில் நேற்று மாலை பலத்த மழை பெய்தது. பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி ரோடு, செம்மாங்குடி ரோடு, கோட்டார் பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதுபோல திருவட்டார், தக்கலை, பூதப்பாண்டி, முள்ளங்கினாவிளை, கோழிப்போர்விளை, அடையாமாடை, ஆனை கிடங்கு போன்ற பகுதிகளிலும் மழை பெய்தது. அனைக்கிடங்கில் அதிகபட்சமாக 26 மி.மீ. மழை பெய்தது. மாவட்டத்தின் முக்கிய அணையான பேச்சிப்பாறைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் மழை பெய்தாலும், வெப்பமான காலநிலை தொடர்கிறது.

## ***சீஸன் காரணமாக உற்பத்தி அதிகரிப்புஒரு கிலோ தக்காளி ரூ.5க்கு விற்பனை***

திருச்சி:தோகைமலை சுற்றுவட்டார பகுதிகளில், தக்காளி உற்பத்தி அதிகரித்ததால், திருச்சி நகரில், ஒரு கிலோ நாட்டு தக்காளி, ஐந்து ரூபாக்கு

விற்பனை செய்கின்றனர்.திருச்சி நகரில் உள்ள காந்தி மார்க்கெட் காய்கறி கடைகளுக்கு, திண்டுக்கல், தர்மபுரி, பொள்ளாச்சி மற்றும் மணப்பாறை, தேகைமலை சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து, நாள்தோறும், ஐந்து டன் தக்காளி விற்பனைக்கு வருகிறது.வீடு, ஹோட்டல்கள், பள்ளி, கல்லூரி ஹாஸ்டல்கள், மளிகை கடைகளுக்கு மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகிறது. திருச்சி நகரில் பண்டிகை மற்றும் விஷேச நாட்கள் காரணமாக, நாட்டு தக்காளி கிலோ, 15 ரூபாய், நாட்டு தக்காளி (கிராஸ்) 10 ரூபாய் முதல், 12 ரூபாய்க்கும், 15 கிலோ பெட்டி, 200 ரூபாய் முதல், 220 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.கடந்த இரண்டு நாட்களாக, திருச்சி நகரில் தோகை மலை சுற்றுவட்டார பகுதிகளில் விளைவிக்கப்பட்ட நாட்டு தக்காளிகளை, விவசாயிகளிடம் இருந்து நேரடியாக வாங்கி வந்து, நகரில் வாகனங்களில் வைத்து, கிலோ, 5 ரூபாய் விலைக்கு விற்பனை செய்கின்றனர். இது குறித்து தக்காளி வியாபாரி மூர்த்தி கூறியதாவது, மணப்பாறை, தோகை மலை பகுதிகளில், கோடை வெயில் காரணமாக தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளது. மார்க்கெட்டில் விலை சரிந்து கட்டுபடியாகாததால், எங்களை போன்ற நேரடி வியாபாரம் செய்பவர்கள், ஏக்கர் கணக்கில் விலை பேசி, தக்காளியை பறித்து எடுத்து வந்து, நான்கு கிலோ 20 ரூபாய் விலைக்கு விற்பனை செய்கிறோம். கோடை மழை வந்து விட்டால், தக்காளி விலை உயர வாய்ப்பு உள்ளது. இல்லாவிட்டால், தக்காளி பறிக்கும் விலைக்கு கூட கட்டுபடியாகாது. இவ்வாறு அவர் கூறினார்.

## கால்நடை நோய் தடுப்பு விழிப்புணர்வு கூட்டம்

சேலம் : கால்நடை பரமாரிப்பு துறை சார்பில், கால்நடை மற்றும் கோழியின நோய்களும் தடுப்பு முறை என்ற தலைப்பில், விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. சேலம் கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், "கால்நடை மற்றும் கோழியின நோய் தடுப்பு முறை' என்ற தலைப்பில், மாவட்ட அளவிலான விழிப்புணர்வு கூட்டம் நேற்று நடந்தது. கால்நடை புலனாய்வு பிரிவு உதவி

இயக்குனர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். மண்டல இணை இயக்குநர் ரவீந்திரன் தலைமை வகித்ததார். கால்நடைகளுக்கு கோடை மற்றும் குளிர்காலங்களில் ஏற்படுகின்ற நோய் தடுப்பு முறை, நோய் தாக்கி விலங்குக்கு கொடுக்கப்படும் முதலுதவி சிகிச்சை முறை குறித்து விளக்கப்பட்டது. கால்நடை பராமரிப்பு துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முருகேசன், துணை இயக்குனர் கோவிந்தசாமி, புது வாழ்வு திட்ட அலுவலர் சுந்தரவேல், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## <u>வன நாள் விழா</u>

காரைக்குடி : வன வனங்களை பாதுகாப்பதின் அவசியம்,கால நிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளை வலியுறுத்தி செட்டிநாடு மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில், உலக வனநாள், தண்ணீர் தினம், வானிலை நாள் கொண்டாடப்பட்டது. மானாவாரி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுவாமிநாதன், உதவி பேராசிரியர்கள் சிவபிரகாஷ், கண்ணன், பரமசிவன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## <u>இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க சிறப்பு திட்டம் : பூச்சிக்கொல்லியை அழிக்க ரூ. 11 லட்சம் ஒதுக்கீடு</u>

தர்மபுரி:இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க, தர்மபுரி மாவட்டத்தில், 11 கிராமங்களில் சிறப்பு திட்டமாக, பூச்சிக்கொல்லிகளை அழிப்பதற்காக, மாற்று இனத்தை சேர்ந்த பூச்சிகளை உற்பத்தி செய்யும் திட்டம் செயல்படுத்த உள்ளது. தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில் நெல், கரும்பு, மா, மரவள்ளிக்கிழங்கு, ராகி, சாமை, தக்காளி, தென்னை உள்ளிட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர், ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது.இயற்கை வேளாண்மை மூலமாக, நெல், கரும்பு, ராகி, சாமை உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வந்தனர். இதனால், விவசாயிகளுக்கு அதிக மகசூல் மற்றம் தீவனங்கள் கிடைத்து வந்தது. ஆனால், தற்போது தர்மபுரி மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில், பாரம்பரிய பயிர் அதிகளவில்

சாகுபடி செய்யாமல் மாயமானது.மேலும், ரசாயண உரங்கள் ஆக்கிரமிப்பு அதிகரிப்பால், மண்ணின் தன்மை, பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டது. உணவே மருந்தாக இருந்த காலம் மாறி, தற்போது உணவே மெல்ல மெல்ல நஞ்சாக மாறி வருவதாக இயற்கை வேளாண்மை ஆர்வலர்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வருகிறது.இருந்தும், சில இயற்கை வேளாண் ஆர்வலர்கள், மண்ணுக்கும், மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத, இயற்கை விவசாயம் குறித்து விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த துவங்கியுள்ளனர். இதனால், பொதுமக்கள் மத்தியில், இயற்கை வேளாண் முறையில் உற்பத்தி செய்யப்படும் தானியங்கள், காய்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்ததுடன், கூடுதல் விலையும் கிடைக்க தொடங்கியது. ஆனால், அரசின் சார்பில், இயற்கை வேளாண் உற்பத்தை அதிகரிக்க போதிய நடவடிக்கை எடுக்க வில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. குறிப்பாக, உரங்கள் மற்றும் நவீன ரக விதைகளுக்கு வழங்கும் மானியத்தை போன்று, இயற்கை முறை உரங்கள் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளுக்கு மானியம் மற்றும் பராம்பரிய விதை ரகங்களை வழங்க கோரிக்கை விடுத்து வருகின்றனர்.வேளாண்மை இணை இயக்குனர் மோகன் கூறியதாவது: தமிழக அரசு, இயற்கை வேளாண்மை குறித்து, பொதுமக்கள் மத்தியில் பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்தில், விவசாய பயிர்களை தாக்கும், பூச்சிகளை அழிக்கும், பூச்சிகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.இதற்காக மாவட்டத்தில், நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, மொரப்பூர் ஆகிய யூனியன்களில், 11 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, பயிர்களை தாக்கு பூச்சிகளை அழிக்கக் கூடிய, மாற்று இனத்தை சேர்ந்த பூச்சிகளை உற்பத்தி செய்ய, தலா கிராமத்திற்கு, ஒரு லட்சம் ரூபாய் வீதம், 11 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், நான்கு வேளாண் அலுவலர்கள், ஆந்திர மாநிலம் ஹைத்ராபாத்தில் இதற்காக சிறப்பு பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டம், வரும், ஏப்ரல் இரண்டாவது வாரத்துக்குள் செயல்படுத்தப்படும். மேலும், விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை

குறித்து, தேவையான ஆலோசனைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பூக்கள் விலை எகிறியது**



மதுரை: முகூர்த்தம், பங்குனி உத்திரம் போன்றவற்றால் கடந்த சில நாட்களாக குறைந்திருந்த பூக்களின் விலை மீண்டும் உயரத் துவங்கி உள்ளது. மதுரை பூ மார்க்கெட் வியாபாரிகள் கூறுகையில், புதன்கிழமை முகூர்த்தம் மற்றும் கோயில்களில் பங்குனி உத்திர திருவிழா போன்றவற்றால் பூக்களின் விலை மீண்டும் உயரத் துவங்கி உள்ளது. மல்லி, ரோஜா உள்ளிட்ட பூக்களின் விலை உயர்ந்து வருகிறது என்றனர். மதுரை மலர் மார்க்கெட்டில் பூக்களின் நேற்றைய விலை (கிலோ) நிலவரம். (பழைய விலை அடைப்புக்குறிக்குள்):

மல்லிகை ரூ.150 (ரூ.100)

சம்மங்கி ரூ.120 ( ரூ.80)

ரோஜாரூ.100 (ரூ.60)

அரளிரூ.130 (ரூ.100)

பிச்சிப்பூ ரூ.180 (ரூ.150)

முல்லைப்பூ ரூ.200 (ரூ.160)

செண்டுபூ ரூ.50 ( ரூ.30)

கோழிக்கொண்டை ரூ.60 (ரூ.40)

கனகாம்பரம்ரூ.300 (ரூ.200)

மரிக்கொழுந்து ரூ.60 ( ரூ.50)

மருள்(கட்டு) ரூ.60 ( ரூ.50)

துளசி ரூ.50 (ரூ.40)

பட்டன்ரோஸ் ரூ.250 (ரூ.180)

தாமரை(ஒருபூ) ரூ. 10 -

மெட்ராஸ்மல்லி ரூ.150 (ரூ.100)

செவ்வந்தி ரூ.100 (ரூ.60)

**<u>எலுமிச்சை விலை உயர்வு</u>**



சேலம்: தமிழகத்தில் வெயில் அதிகரித்து வருவதன் காரணமாக எலுமிச்சை பழத்தின் விலை உயர்ந்து வருகிறது. எலுமிச்சை பழம் ஆந்திர மாநிலம் கடப்பா, விஜயவாடா உள்ளிட்ட பகுதிகளிலும், தமிழகத்தில் ஈரோடு, புதுக்கோட்டை, விருதுநகர், தலைவாசல், மேச்சேரி உள்ளிட்ட பகுதிகளிலும் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் அறுவடை செய்யப்படும் எலுமிச்சை பழங்கள் சேலம் செவ்வாய்பேட்டை பால் மார்க்கெட், திருமணிமுத்தாறு ஓரம், கடைவீதி உள்ளிட்ட பகுதிகளுக்கு மூட்டை கணக்கில் கொண்டு வரப்படுகிறது. கடந்த சில மாதங்களாக எலுமிச்சை விலை குறைந்து காணப்பட்டது. தற்போது வெயில் காரணமாக எலுமிச்சை பழத்தின் விலை உயர்ந்து வருகிறது. கடந்த சில மாதங்களாக ரூ.10க்கு நான்கு எலுமிச்சை பழம் விற்கப்பட்டது. தற்போது பெரிய சைஸ் எலுமிச்சை பழம் ரூ.5 எனவும், சிறிய பழம் ரூ.3 முதல் ரூ.3.50 என விற்பனை செய்யப்படுகிறது.

**<u>பருவம் தப்பிய மழையால் உற்பத்தி பாதிப்பு: மாம்பழம் விலை இந்த ஆண்டு அதிகரிக்கும்</u>**



புதுடெல்லி: ஒவ்வொரு ஆண்டும் மார்ச் இறுதியில் மாம்பழ சீசன் தொடங்கி விடுகிறது. இது ஜூன் வரை நீடிக்கும். நாட்டின் சில பகுதிகளில் ஆகஸ்ட் முதல் வாரம் வரைகூட மாம்பழங்கள் கிடைக்கும். இந்த ஆண்டும் வழக்கம் போல மாம்பழ சீசன் தொடங்கி விட்டது. இருப்பினும் சந்தைகளில் எதிர்பார்த்த அளவு வரத்து இல்லை. பருவம் தப்பி பெய்த மழையால் மாம்பழம் வரத்து கடந்த ஆண்டை விட இந்த சீசனில் குறைவாக இருக்கும் என்று வியாபாரிகள் கூறுகின்றனர்.பருவம் தப்பி பெய்த மழை புயல் காற்று காரணமாக வட மாநிலங்களில் மாம்பழ விளைச்சல் பாதிக்கப்பட்டது. குறிப்பாக உத்தர பிரதேசம், பீகார் மாநிலங்களில் பாதிப்பு கடுமையாகஇருந்தது. இந்த மாதம் முதல் வாரத்தில் பெய்த பலத்த மழை மற்றும் சூறைக்காற்றில் மாம்பூக்கள் உதிர்ந்து விட்டதால் விளைச்சல் இல்லை. இதுகுறித்து அனைத்து இந்திய மாம்பழ விவசாயிகள் சங்க தலைவர் இன்ஸ்ராம் அலி கூறுகையில், பருவம் தப்பிய மழையால் 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை மாம்பழ விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்பார்த்த அளவு மாம்பழ அறுவடை இந்த ஆண்டு இருக்காது. அதுவும், கடந்த ஆண்டை விட குறைவாகவே இருக்கும் என்று தெரிவித்தார். சீசன் துவங்கிய நிலையில் சில ரக மாம்பழங்கள் விலை கடந்த ஆண்டை விட 50 சதவீதம் வரை அதிகரித்துள்ளது என வியாபாரிகள் கூறினர். இதற்கு முன்பு தேசிய தோட்டக்கலை வாரியம் இந்தியாவின் மாம்பழ விளைச்சல் பற்றிய முன்கூட்டிய மதிப்பீட்டை வெளியிட்டிருந்தது. இதன்படி இந்த ஆண்டு 1.93 கோடி டன் மாம்பழம் உற்பத்தி இருக்கும் என கணித்திருந்தது. முந்தைய ஆண்டு இது 1.84 கோடி டன்களாக இருந்தது. எதிர்பாராத மழை இந்த கணிப்பை பொய்யாக்கிவிட்டது. அனைத்து மாம்பழ ரகங்களும் இந்த ஆண்டு விளைச்சல் குறைவாக இருக்கும் என்பதில் எந்த

சந்தேகமும் இல்லை. இது விலையில் மட்டுமின்றி ஏற்றுமதியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று தேசிய தோட்டக்கலை வாரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால், பாதிப்பு எவ்வளவு என்ற மதிப்பீட்டை வெளியிட வில்லை. அல்போன்ஸா உள்ளிட்ட உயர்ரக மாம்பழங்களுக்கு வெளிநாடுகளில் பெரும் வரவேற்பு உள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரலில், மாம்பழத்தில் புழு இருப்பதாக கூறி ஐரோப்பிய நாடுகள் அல்போன்ஸா உள்ளிட்ட இந்திய மாம்பழங்களுக்கு தடை விதித்தன. தற்போது இந்த தடை நீக்கப்பட்டுள்ளது. இருப்பினும் விளைச்சல் பாதிப்பால் இந்த ஆண்டு 25 முதல் 30 சதவீதம் வரை ஏற்றுமதி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் மாம்பழ ஏற்றுமதியை ஊக்குவிக்க தற்போதுள்ள 40 சதவீத போக்குவரத்து மானியத்தில் இருந்து 70 சதவீதமாக உயர்த்த மாம்பழ ஏற்றுமதியாளர்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றனர். சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திரா மாநிலம் விஜயவாடா, கம்மம், வாரங்கல், நெல்லூர், கர்நாடக மாநிலம் ஹிமோகா, ஹூப்ளி, ஸ்ரீஷி, தும்பூர், தமிழகத்தில் சேலம், தேனி, திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் இருந்து பங்கனபள்ளி, செந்தூரா, இமாம்பசந்த், மல்கோவா, அல்போன்சா, ருமானி, நீலம், காலப்புடி, ரசால், பெங்களூரா உள்பட பல வகை மாம்பழங்கள் வருகின்றன. ஏப்ரலில் சீசன் தொடங்கினாலும், இந்த மார்க்கெட்டுக்கு மே மாதத்தில் 300 டன் முதல் 400 வரை தினமும் வந்து சேரும். ஜூன் மாதத்தில் குறைய தொடங்கும். இந்த ஆண்டு மாம்பழ விளைச்சல் குறைவாக உள்ளதால், வரும் மே மாதம் 200 முதல் 300 டன் வரை வரத்து இருக்கும் என வியாபாரிகள் கூறுகின்றனர். கடந்த சில நாட்களாக பங்கனபள்ளி, செந்தூரா ஆகிய வகை மாம்பழங்கள் மட்டும் வந்துள்ளன. தினமும், 20 முதல் 25 டன் வரை வந்து சேர்கிறது. செந்தூரா கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரையும், பங்கனபள்ளி ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு வரத்து அதிகமாக இருந்ததால், விலையும் குறைவாகஇருந்தது.

**<u>மிளகாய் சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனை</u>**

காஞ்சிபுரம், : மிளகாய் சாகுபடியில் அதிகளவில் மகசூல்பெற விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போது சித்திரை பட்டத்தில் காய்கறி சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதிக விலை கொடுத்து வாங்கும் விதைகள் தரமானதாக உள்ளதா? நல்ல முளைப்புத்திறன் உள்ளதா? என விவசாயிகள் பார்க்கவேண்டும். குறிப்பாக, மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகள் 100 சதவீதம் முளைப்பு திறன் உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். வீரிய ஒட்டுரக மிளகாய் பயிரினை 2.5 அடி இடைவெளிவிட்டு நடவு செய்தால் ஏக்கருக்கு 8,890 செடிகள் வரை பராமரிக்கலாம். இப்படி செய்தால் 20 சதவீதம் கூடுதல் மகசூல் பெறலாம்.மேலும் விவசாயிகள் தங்களது விதைகளை 10 கிராம் மாதிரி எடுத்து விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரியில் ரூ30 செலுத்தி பரிசோதனை செய்து அதிக மகசூல் பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என கூறப்பட்டுள்ளது.

**<u>அட்மா திட்டம் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி</u>**

திருவள்ளூர், : பூண்டி வட்டார வேளாண்மை துறையின் 'அட்மா' திட்டத்தின் மூலம் சித்தம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி பயிற்சி கருவி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் பிரின்ஸ் கிளெமென்ட் தலைமை வகித்தார். அட்மா திட்ட துணை இயக்குனர் முத்துராமன் முன்னிலை வகித்தார். தொழில் நுட்ப மேலாளர் பாஸ்கர் வரவேற்றார். இதில், பச்சை பயறு சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்தும், மகசூலை அதிகரிக்க 2 சதவீதம் டிஏபி கரைசல் தயாரித்தல் மற்றும்

உபயோகித்தல் குறித்தும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இலவசமாக இடு பொருட்கள், பச்சை பயறு சாகுபடி குறித்த தொழில்நுட்ப கையேடு வழங்கப்பட்டது. உதவி தொழில்நுட்ப மேலாளர் லோகேஷ்வரன் நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு பண்ணை பயிற்சி முகாம்

புழல், : புழல் வட்டார வேளாண்மை துறையின் சார்பில் விவசாயிகளுக்கு பண்ணை பயிற்சி சிறப்பு முகாம், ஆண்டார்குப்பம் கிராமத்தில் நேற்று நடைபெற்றது. திட்ட அமைப்பாளர் ராகவேந்திர ராவ் தலைமை தாங்கினார். திட்ட மேலாண்மை துணை இயக்குநர் முத்துராமன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, முலாம் பழம் சாகுபடி செய்யும் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். இதில் வேளாண்மை அலுவலர் கதிர்குமார், தோட்டக்கலை உதவி அலுவலர் அய்யனார் ஆகியோர் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மானிய திட்டங்கள் குறித்து பேசினர். விவசாய பண்ணை மகளிர் குழுவினருக்கு சுழல் நிதியின் மூலம் ரூ.10 ஆயிரத்துக்கான காசோலை, வேளாண் இடுபொருட்கள் மற்றும் 2 கைதெளிப்பான்கள் ஆகியவை வழங்கப்பட்டன. வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுனில்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர் கலையரசன், நவீன் ஞானசவுந்தர்யா உள்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். அனைத்து விவசாயிகளுக்கு திரவ உயிர் உரங்கள், சாகுபடி குறித்து தொழில்நுட்ப கையேடுகள் வழங்கப்பட்டன.

## தி.மலை மாவட்ட விவசாயிகள் தாவர கரைசல் பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் வேளாண்மை அதிகாரி தகவல்

திருவண்ணாமலை, : விவசாயிகள் தாவர கரைசல் பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார். திருவண்ணாமலை வேளாண்மை துணை இயக்குனர்(வேளாண் வணிகம்) கி.ராஜேந்திரன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது: இயற்கையை மாசுபடுத் தும் ரசாயன மருந்துகளை சிறிது, சிறிதாக குறைத்து

இயற்கை வழி மூலிகைகள் நாம் பயன்படுத்த வேண்டும். வேளாண்மையில் ரசாயன பூச்சி கொல்லிகளையும், உரங்களையும் தவிர்த்து இயற்கை வழி உரங்கள் மற்றும் தாவர கரைசல்களை பயன்படுத்தினால் உற்பத்தி செலவை குறைக்கலாம். அதிக வருமானம் ஈட்டலாம். பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டில் தாவரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. சுமார் 2400க்கு மேற்பட்ட தாவரங்கள் இத்திறனை கொண்டுள்ளன. இதுதவிர சாணம், கோமியம், மீன் கழிவுகள், ஊறல்கள்-மோர் ஆகியவையும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துகிறது. மேலும் இவை பயிர்கள் வளர்ச்சி ஊக்கிகளாகவும் செயல்படுகிறது. நொச்சி மற்றும் வேம்பு இலைகளின் பசைக்கூழ்மங்கள் தானியங்கள், பயறு வகைகளின் சேமிப்பு கிடங்குகளில் உருவாகும் பூச்சிகளை கட்டுப்படுத்து கிறது. எனவே திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் வேளாண்மையில் தாவர கரைசல்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெற்றிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

## <u>சோலார் மின்சாரம் மூலம் நீர் பாய்ச்சும் விவசாயி</u>

ஊட்டி, : சோலார் மின்சாரத்தை பயன்படுத்தி விவசாய நிலங்களுக்கு ஸ்பிரிங்லர் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகிறார் விவசாயி. அதிக திறன் கொண்ட சோலார் மின் திட்டம் அமைத்தால், மட்டுமே விவசாய மோட்டார்களை இயக்க முடியும். இதனால், பெரும்பாலான விவசாயிகள் டீசல், பெட்ரோல் மற்றும் மின்சாரம் ஆகியவைகளை பயன்படுத்தி மின் மோட்டார்களை இயக்கி ஸ்பிரிங்கலர் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். ஆனால், முதன் முறையாக விவசாயத்திற்காக முள்ளிக்கொரை (பெர்ன்ஹில்) பகுதியை சேர்ந்த ராமன் என்ற விவசாயி சோலார் மின்சாரத்தை பயன்படுத்தி ஸ்பிரிங்லர் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகிறார். இவர், தான் வைத்துள்ள 5 ஏக்கர் நிலத்திற்கு இந்த சோலார் மின்சாரத்தை பயன்படுத்தியே தண்ணீர் பாய்ச்சி வருகிறார். அவர் கூறியதாவது: மின்சாரம் மற்றும் டீசல் போன்றவைகளை பயன்படுத்தி ஸ்பிரிங்கலர் மூலம் எனது விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகிறேன். ஆனால், தற்போது பகல் நேரங்களில் இந்த சோலார் மின் உற்பத்தி

திட்டத்தை பயன்படுத்தியே எனது நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகிறேன். பகல் நேரங்களில் மின்சாரம் மற்றும் டீசல் மோட்டார்களை பயன்படுத்தி எடுக்கும் அளவே தண்ணீர் எடுக்கப்பட்டு விவசாயத்திற்கு பயன்படுத்துகிறேன். இதற்கு ஒரு முறை செலவு செய்தால், போதும். மாதம் தோறும் கட்டணம் செலுத்த தேவையில்லை. அதே போல் டீசல் வாங்க அலையத் தேவையில்லை, என்றார். தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மணி கூறுகையில், நீலகிரி மாவட்டத்தில் முதன் முறையாக 18 விவசாயிகளுக்கு சோலார் பேனல் வழங்கப்பட்டுள்ளது. 80 சதவீதம் மானியம் கிடைக்கிறது. இத்திட்டம் வெற்றியடைந்தால், தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகளுக்கு மானியத்துடன் சோலார் பேனல் வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகளின் செலவுகளை குறைக்க முடியும். அதே சமயம் புகை மாசு ஏற்படுவதையும் கட்டுப்படுத்த முடியும்,' என்றார்.

## <u>எருமை வளர்க்க தோடர் பழங்குடியினருக்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்படும்</u>

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தில் எருமை வளர்க்க தோடரின மக்களுக்கு மீண்டும் வனத்துறை மூலம் மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்படும், என வன அலுவலர் தெரிவித்தார். கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தோடர் ரக எருமை இன பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம் ஊட்டியில் நேற்று நடந்தது. மாவட்ட கால்நடைப் பண்ணை துணை இயக்குநர் செல்லதுரை வரவேற்றார். மண்டல இணை இயக்குநர் மனோகரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் இருதயராஜ், பழங்குடியினர் ஆராய்ச்சி மைய இயக்குநர் சுப்ரமணியம், ஆடு இன விருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ஐயூப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், தெற்கு கோட்ட வன அலுவலர் பத்ரசாமி பேசியதாவது: நீலகிரி மாவட்டத்தில், 6 வகை பழங்குடி யின மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் வனத்தை சார்ந்தே வாழ்கின்றனர். இந்தியாவில் உள்ள ஒரு சில பழங்குடியின மக்கள் மட்டுமே மாமிசம் சாப்பிடுவதில்லை. அதில், தோடர் பழங்குடியின மக்களும் ஒன்று. பழங்குடியின மக்கள் மேம்பாட்டிற்காக கடந்த ஆண்டு தெற்கு வனக்கோட்டம்

சார்பில் முள்ளி மற்றும் தெப்பக்காடு மந்து ஆகிய பகுதிகளில் எருமை கன்றுகளை வளர்க்க பாதுகாப்பு மையம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இந்த நிதியாண்டில் இரு மந்துகளுக்கு(பகுதிகள்) எருமை கன்று பாதுகாப்பு மையம் அமைக்கப்படும். தோடர் பழங்குடியின மக்களுக்கு இது போன்று மையங்கள் தேவைப்பட்டால், எங்களை அணுகலாம். அனைத்து மந்துகளிலும் நாங்கள் பாதுகாப்பு மையங்கள் அமைத்து தயாராக உள்ளோம், என்றார்.

வடக்கு வனக்கோட்ட வன அலுவலர் சவுந்திரபாண்டியன் பேசியதாவது: தோடர் இன மக்கள் வளர்க்கும் எருமைகளை மேய்ப்பதற்காக மேய்ச்சல் நிலம் அப்போதைய வனத்துறையினரால் வழங்கப்பட்டது. ஆனால், இரண்டாம் உலகப்போருக்கு பின், நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காக வன நிலங்களில் கற்பூர மரங்கள் மற்றும் சீகை மரங்கள் பயிரிடப்பட்டன. இதனால், மேய்ச்சல் நிலம் குறைந்தது. வளர்ப்பு எருமைகள் குறைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். தற்போது கற்பூரம் மற்றும் சீகை மரங்களை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் அரசும், அவர்களுக்கு மீண்டும் மேய்ச்சல் நிலங்களை வழங்க முடிவு செய்துள்ளது. தோடர் பழங்குடியின மக்கள் எங்களை அணுகினால், அவர்களுக்கு மேய்ச்சல் நிலம் மீண்டும் வழங்கப்படும். புலி, சிறுத்தை போன்ற விலங்குகளிடம் இருந்து இந்த எருமைகளை பாதுகாக்க திட்டம் வகுத்து கொடுத்தால், அதனை அரசுக்கு தெரிவித்து வனத்துறை மூலம் உதவி செய்யப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

கலெக்டர் சங்கர் கருத்தரங்கை துவக்கி வைத்து பேசுகையில், நீலகிரி மாவட்டத்தில் வாழும் பழங்குடியின மக்கள் வனத்தை ஒட்டியே வாழ்கின்றனர். தோடர் பழங்குடியினரின் வளர்ப்பு எருமைகள் பல்வேறு காரணங்களால் 20 ஆயிரத்திலிருந்து 2 ஆயிரமாக குறைந்து விட்டது. வளர்ப்பு எருமைகளை பாதுகாக்க, நோய் தடுப்பு முறைகள், பசுந்தீவனம் வழங்குதல், தாதுஉப்பு, தீவன உற்பத்தி, குடற்புழு நீக்க பரிசோதனை முகாம் போன்றவை நடத்தப்பட்டு வருகிறது. இதனை தோடர் இன மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தோடர் பழங்குடியின மக்கள் வளர்ப்பு எருமைகளை பாதுகாக்க பல்வேறு

நடவடிக்கைகள் எடுக்கப்படும், என்றார். இந்த கருத்தரங்கில், தமிழ்நாடு பழங்குடியின மக்கள் கவுன்சில் மாநில செயலாளர் மணி, தோடர் சமுதாய முன்னேற்ற சங்க தலைவர் மந்தேஷ்குட்டன், செயலாளர் சத்தியராஜ், பொருளாளர் மீன்ராஜ், தோடர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் தேவாஸ்குட்டன், நாவாள செயலாளர் ஆல்வாஸ், தருன்சோப்ரா உட்பட தோடர் பழங்குடியின மக்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில், உதவி இயக்குநர் மகாலிங்கம் நன்றி கூறினார்.

## மஞ்சனக்கொரையில் ஆடுகள் பலி கால்நடைத்துறையினர் ஆய்வு

ஊட்டி, : ஊட்டி அருகே உள்ள மஞ்சனக்கொரை கிராமத்தில் பலர் ஆடு வளர்க்கின்றனர். கடந்த சில நாட்களாக இக்கிராமத்தில் உள்ள ஆடுகள் அடுத்தடுத்து பலியாகி வருகின்றன. இதனால் அதிர்ச்சியடைந்த பொதுமக்கள் கலெக்டரிடம் மனு அளித்தனர். அதில், 'மஞ்சனக்கொரை பகுதியில் பராமரிப்பில்லாத நகராட்சி கழிப்பிடத்தில் இருந்து கழிவுநீர் திறந்தவெளியில் ஓடுவதா ஆடுகள் தொட ர்ந்து பலியாவதற்கு இது ஒரு காரணமாக இருக்க கூடும் எனவும் எனவே இப்பகுதியில் உரிய ஆய்வுகள் நடத்திட வேண் டும்', என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், கால்நடை பராமரிப்புத்துறை மருத்துவர் சுகுமாரன் தலைமையிலான குழுவினர் நேற்று மஞ்சனக்கொரை பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர். அவர்களிடம் பொதுமக்கள் கூறுகையில், 'தமிழக அரசின் ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் சிலருக்கு இலவசமாக ஆடுகள் வழங்கப்பட்டன. அவற்றில் சில ஆடுகள் இறந்து விட்டதாகவும், இதன் பிறகும் அடுத்தடுத்து மர்ம நோயால் ஆடுகள் இறப்பதாக', தெரிவித்தனர். இதனை தொடர்ந்து அந்த மருத்துவ குழுவினர் அப்பகுதியில் நோய் தாக்கி இறந்த ஒரு ஆட்டின் உடலை பிரேத பரிசோதனைக்காக எடுத்து சென் றனர். இதுகுறித்து கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குநர் டாக்டர் மனோ கரன் கூறுகையில், ''தமிழக அரசின் மூலம் வழங்கும் இலவச ஆடுகள் சமவெளி பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்டு இங்கு பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. காலநிலை மாறுபாடு காரணமாக சில ஆடுகள் பலியாகி

இருக்கலாம். ஆனால் இலவச ஆடுகளால் தான், மற்ற ஆடுகள் பலியானதாக கூறுவது தவறானது. இருப்பினும் மஞ்சனக்கொரை பகுதியில் ஆடுகள் தொடர்ந்து பலியாகி வருவது குறித்து உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இறந்த ஆட்டின் உடல் பிரேத பரிசோதனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளது. ஆய்விற்கு பின் உண்மை காரணம் தெரியவரும்', என்றார்.

## நதிநீர் இணைப்பு திட்டத்தை வலியுறுத்தி டெல்லியில் கவன ஈர்ப்பு போராட்டம்

தோகைமலை, : கரூர் உட்பட 7 மாவட்டங்களைச் சேர்ந்த 8 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் காவிரி வைகை குண்டாறு இணைப்பு கால்வாய் திட்டத்தினை செயல்படுத்த வலியுறுத்தி டெல்லியில் கவனஈர்ப்பு போராட்டம் உள்பட பல்வேறு போராட்டங்கள் தொடர்ந்து நடத்துவது விவசாயிகள் கூட்டமைப்பினர் முடிவு செய்துள்ளனர். தோகைமலை ஒன்றியம், கழுகூர் கிழக்கு மாரியம்மன் கோயில் திடலில் காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் நீர் பாசன திட்ட விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் கடந்த 29ம் தேதி எழுச்சி மாநாடு நடந்தது. இம்மாநாட்டிற்கு கூட்டமைப்பின் மாநிலத்தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். முன்னோடி விவசாயிகள் மற்றும் கூட்டமைப்பு நிர்வாகிகள் வக்கீல் அய்யாக்கண்ணு, கூடலூர் முன்னாள் தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கரூர் மாவட்ட செயலாளர் கழுகூர் ரவிக்குமார் வரவேற்றார்.

மாநில கூட்டமைப்பு தலைவர் மாரிமுத்து பேசுகையில், காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் நீர் பாசன திட்ட நமது தலைமுறையில் இத்திட்டம் செயல்படுத்தப்படாவிட்டாலும் எதிர்கால சந்ததியினர் பயன்பெறும் வகையில் பின்னர் செயல்படுத்தப்படும் வகையில் நமது முயற்சி தொடர்ந்து வருகிறது. சிவகங்கை நகர் மன்றத் தலைவர் மற்றும் கூட்டமைப்பின் மாநிலச் செளயலாளர் அர்ஜூனன் பேசுகையில், முந்தைய காலத்தில் கிராமங்களில் இயற்கையாக இருந்து வந்த விவசாய உற்பத்தி இழந்து கடுமையான வறட்சி, குடிநீர் தட்டுபாடு போன்ற நெருக்கடியான இக்காலக் கட்டத்தில் நதி நீர் இணைப்பு என்பது அத்தியாவசியமானதாகும். அதன்படி அதிகப்படியாக விணாகும் உபரி நீரை பற்றாக்குறையில் உள்ள இதர பகுதிகளுக்கு வழங்கிட

வலியுறுத்தும் திட்டமாகும். தற்போது மாயனூர், கழுகூர், தோகைமலை, மணப்பாறை, மணிகண்டம் ஆகிய பகுதிகள் வழியாக திட்டத்தின் வழிப்பாதையினை விவசாயிகள் நலன் கருதி மாற்றியமைத்து மத்திய, மாநில அரசுகள் இத்திட்டத்தினை செயல்படுத்திடவேண்டும் என்றார். வரும் மே 1ம் தேதி 7 மாவட்டங்களில் நடக்கும் கிராம சபைக் கூட்டங்களில் திட்டம் நிறைவேற்றிட வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றி அரசுக்கு அனுப்புதல், ஏப்.8ம் தேதி புதுகையில் உண்ணாவிரதம், விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் மாநில விவசாயிகள் மாநாடு, தேசிய நெடுஞ்சாலைகளில் போராட்டம், டெல்லியில் பாராளுமன்றம் முன்பாக கவனஈர்ப்பு போராட்டம் என பல்வேறு சட்டத்திற்கு உட்பட்ட போராட்டங்களை படிப்படியாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் கரூர் மாவட்ட விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண் டும் என்றார். கர்நாடகா அரசு காவிரியின் குறுக்கே மேகதாது, ராசிமணல் ஆகிய 2 இடங்களில் அணை கட்ட நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை வன்மையாக கண்டிப்பது உட்பட தீர்மானங்கள் நிறைவேறின. முன்னதாக கூட்டமைப்பின் கரூர் மாவட்ட தலைவர் சீத்தப்பட்டி பிரகாஷ் கண்ணா, அனை த்து விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் ஆதி மூலம், பஞ். தலைவர்கள் பில்லூர் ராகவன், கழுகூர் செல்வலெட்சுமிராதா, முன் னாள் தலைவர்கள் புழுதேரி மருதைராஜ், ஆர்.டி.மலை சின்னையன், கழுகூர் கூட்டுறவு வங்கி தலைவர் ராதாகிருஷ்ணன், கூட்டமைப்பு நிர்வாகிகள் பாரூக், சமுத்திரம் கணேஷ், ராமநாதபுரம் மதுரைவீரன் உட்பட 7 மாவட்ட விவசாய கூட்டமைப்பு நிர்வாகிகள் கலந்துகொண்டு கருத்துரையாற்றினர். முன்னோடி விவசாயி ராமன்நன்றிகூறினார்.

**<u>க.பரமத்தியில் ஆடுகளுக்கு ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா?</u>**

க.பரமத்தி, : க.பரமத்தியில் ஆடுகளுக்கு என்று ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா ஆடு வளர்ப்போர்கள் எதிர்பார்க்கின்றனர். கரூர் மாவட்டத்தில் மற்ற ஒன்றியங்களை காட்டிலும் வறட்சி பகுதியாக க.பரமத்தி

ஒன்றியம் உள்ளது. இங்கு அதிக அளவில் செம்மறி ஆடுகள் வளர்த்து வருகின்றனர். இந்த ஆடுகளுக்கு அடிக்கடி புதுவிதமான நோய் தாக்குதல் ஏற்படும் காலங்களில் சின்னதாராபுரம், க.பரமத்தி, தென்னிலை, பவித்திரம், முடிகணம் உள்ளிட்ட 9 கால்நடை மருந்தகங்களுக்கு கால்நடைகளை விவசாயிகள் கொண்டு செல்கின்றனர். ஒன்றியத்தில் உள்ள அணைப் பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், நஞ்சைகாளகுறிச்சி, புன்னம், ராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, மேற்கு, தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பிவாடி, விஸ்வநாதபுரி, ஆகிய 30 ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் மாடு, எருமை ஆடு, கோழி , செல்லபிராணிகள் என ஏராளமாவை வளர்க்கப்பட்டு வருகின்றன. அதிக அளவில் செம்மறி ஆடுகள் அரவக்குறிச்சி தொகுதியில் வளர்க்கபட்டு வருகின்றன என்று கால்நடைத்துறை புள்ளி விபரமும் உறுதிபடுத்தியுள்ளன. இங்கு மாடுகளுக்கு வாய் மற்றும் கால்களில் ஏற்படும் கானை நோய், ஆந்த்ராக்ஸ் காய்ச்சல் உள்ளிட்ட நோய்கள் ஆடுகளுக்கு ஏற்படும் துள்ளுமாரி நோய்களால் கால்நடை பாதிப்பு அவ்வப்போது ஏற்பட்டு நோயால் பாதிக்கப்படும்போது மேலும் பரவாமல் தடுப்பதற்கு நோய் புலனாய்வுத் துறை ஆய்வகம், நடமாடும் வாகனமும் இருப்பதாக தெரிகிறது. ஆனால், க.பரமத்தி ஒன்றியத்திற்கு வருவது இல்லை. மேலும் கால்நடை அதிகமுள்ள இந்த ஒன்றியத்தில் செம்மறி ஆடுகளுக்கு என்று ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக ஆடு வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் அரசுக்கு கோரிக் கை விடுத்து வருகின்றனர். விவசாயிகள், கால்நடை வளர்ப்பவர்கள் பிரதான தொழிலாக கொண்டு வாழ்ந்து வரும் க.பரமத்தி ஒன்றியத்தில் ஆடுகளுக்கு என்று ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் முயற்சி எடுக்க வேண்டும் என கால்நடை வளர்ப்போரின் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக உள்ளது. இது குறித்து கால்நடை விவசாயிகள் கூறுகையில், க.பரமத்தி ஒன்றியத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் வளர்த்து

வருகிறோம். இங்கு பருவமழை மாற்றத்தால் புதுவிதமான நோய்கள் கால்நடைகளை தாக்குகின்றன. இது மாதிரி ஆண்டு தோறும் ஏற்படும் நோய்களை கால்நடை மருத்துவர்கள் ஆராய்ச்சிக்காக எடுத்து செல்கின்றனர். ஆனால் உரிய மருந்து வழங்குவதற்கு முன்பு ஒரு சில ஆடுகள் இறந்து விடுகின்றன. இதனால் பல ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே கால்நடை வளர்ப்பவர்கள் நலன் கருதி செம்மறி ஆடுகளுக்கு என்று ஆராய்ச்சி நிலையம் க.பரமத்தி ஒன்றியத்தில் ஏற்படுத்துவதற்கு மாவட்ட நிர்வாகம் முயற்சி எடுக்க வேண்டும் என்றனர்.

**பொன்னமராவதி பகுதியில் பண்ணை மகளிர் குழுவுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

பொன்னமராவதி,: பொன்னமராவதி வட்டாரத்தில் செயல்பட்டு வரும் அம்மா பண்ணை மகளிர் குழுவினருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. கண்டியாநத்தம், நெருஞ்சிகுடி ஆகிய கிராமங்களில் செயல்படும் அம்மா பண்ணை மகளிர் குழுவினருக்கு அட்மா திட்டம் சார்பில் திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமுக்கு வேளாண் உதவி இயக்குநர் ஜெயபாலன் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் சுந்தரேசன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேவி ஆகியோர் பயிற்சியளித்தனர். முகாம் ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் குமாரசாமி, அருளானந்தம், பழனிச்சாமி, அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ராஜீ, பிரியங்கா ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக, வேளாண் துணை அலுவலர் மாணிக்கவாசகம் வரவேற்றார். முடிவில் வேளாண் உதவி அலுவலர் முருகேசன் நன்றி கூறினார்.

**வெள்ளாடு, செம்மறி ஆடு வளர்ப்பு விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டம், வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் திருமயம் தாலுகா கோட்டையூர் கிராமத்தில் கிரீன் கேர் பவுண்டேசனுடன் இணைந்து வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பு பற்றிய பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம் நேற்று

நடைபெற்றது.முகாமுக்குத் தலைமை வகித்த திருமயம் வேளாண் உதவி இயக்குநர் ராமமூர்த்தி ஆடு வளர்ப்பால் கிடைக்கும் பயன்களை எடுத்துரைத்தார். கோட்டையூர் கால்நடை மருத்துவர் திருநாவுக்கரசு, வெள்ளாடுகள், செம்மறியாடுகளை தேர்வு செய்தல், பராமரித்தால், இனப்பெருக்க மேலாண்மை, குட்டி கள் வளர்ப்பு, பராமரிப்பு, தாக்கும் நோய்கள், அறிகுறிகள், பரவும் விதம், தடுப்பு முறைகள், கொட்டகை அமைத்தல், மேய்ச்சல் முறை, தீவன மேலாண்மை ஆகியன குறித்து விளக்கிக் கூறினார். இதனைத் தொடர்ந்து, வேளாண் அலுவலர் மகேஸ்வரி விவசாயிகளுக்குரிய அரசின் நடைமுறையில் உள்ள திட்டங்கள், உதவிகள், மானியங்கள் மற்றும் அரசு தரும் இடுபொருள் பற்றி விளக்கினார். முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வளர்ப்பு குறித்த பயிற்சி கையேடுகளை உதவி இயக்குநரும், கால்நடை மருத்துவரும் வழங்கினர்.முகாம் ஏற்பாடுகளை கிரீன்கேர் பவுண்டேசன் அலுவலர்கள் ரெங்கசாமி, ராஜ்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>அன்னவாசல் விவசாயிகள் திருச்சிக்கு கற்றறிவு பயணம்</u>

அன்னவாசல், : அன்னவாசல் வட்டார விவசாயிகள் கற்றறிவு பயணமாக திருச்சி போதாவூரில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி நிலையத்துக்கு வேளாண் துறை சார்பில் அழைத்துச் செல்லப்பட்டனர்.தேசிய வாழை ஆராய்ச்சி நிலையத்தில் திசு வளர்ப்பு வாழை அதன் பயன்கள், வாழையில் உர நிர்வாகம், நீர் நிர்வாகம், பூச்சிகளைக் கட்டுப்படுத்தல், வாழையில் துல்லிய பண்ணையம் அமைத்தல், அதன் பயன்பாடு, அறுவடைக்குப் பிறகு கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பம் மற்றும் பதப்படுத்தபடும் உத்தி கள் உள்ளிட்டவை குறி த்து ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் குமார் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்து செயல் விளக்கம் அளித்தார். இந்த பயணம் மிகுந்த பயனளித்ததாக விவசாயிகள் தெரிவித்தனர். இதற்கான ஏற்பாடுகளை அன்னவாசல் வட்டார வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட தொழில்நுட்ப மேலாளர் ரவிராஜன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சக்திவேல், ஆரோக்கியராஜ் ஆகியோர்

செய்தனர். முன்னதாக, அன்னவாசல் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம் வரவேற்றார்.

**அதிக மகசூல் பெற தென்னைக்கு உரமிடும் வழிமுறை**

சேதுபாவாசத்திரம், : தென்னை மரங்களுக்கு இடவேண்டிய உர அளவு குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி வெளியிட்டுள்ள அறிக்கை: தென்னையில் அதிக காய்கள் பெறுவதற்கு உரமிடுவது அவசியம். நாட்டுரக (நெட்டை ரகம்) தென்னைகளுக்கு நடவு செய்தது முதல் ஒரு வருட கன்றுக்கு தொழு உரம் 10 கிலோ, யூரியா 325 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 500 கிராம், வேப்பம்புண்ணாக்கு ஒன்றரை கிலோ இட வேண்டும். 2 வருட கன்றுக்கு தொழு உரம் 20 கிலோ, யூரியா 650 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 1 கிலோ, வேப்பம்புண்ணாக்கு இரண்டரை கிலோ. 3 வருட கன்றுக்கு தொழு உரம் 30 கிலோ, யூரியா 975 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா ஒன்றரை கிலோ, வேப்பம்புண்ணாக்கு மூன்றே முக்கால் கிலோ. 4 வருட கன்றுக்கு தொழு உரம் 40 கிலோ, யூரியா ஒரு கிலோ 300 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 2 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ. 5 வருட கன்றுக்கு தொழு உரம் 50 கிலோ, யூரியா ஒரு கிலோ 300 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 2 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ இட வேண்டும். வீரிய ஒட்டு (நெட்டை ஜ் குட்டை மற்றும் குட்டை ஜ் நெட்டை) ரக தென்னைகளுக்கு ஒரு வருட கன்றுக்கு தொழு உரம் 15 கிலோ, யூரியா 500 கிராம், சூப்பர் 375 கிராம், பொட்டாஷ் 750 கிராம், வேப்பம்புண்ணாக்கு ஒன்றரை கிலோ இட வேண்டும். 2 வருட கன்றுக்கு தொழு உரம் 30 கிலோ, யூரியா 1 கிலோ, சூப்பர் 750 கிராம், பொட்டாஷ் ஒன்றரை கிலோ, வேப்பம்புண்ணாக்கு இரண்டரை கிலோ. 3 வருட கன்றுக்கு தொழு உரம் 45 கிலோ, யூரியா ஒன்றரை கிலோ, சூப்பர் ஒரு கிலோ 150 கிராம், பொட்டாஷ் 2 கிலோ 250 கிராம், வேப்பம்புண்ணாக்கு 3 கிலோ 750 கிராம். 4

வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மரம் ஒன்றுக்கு தொழு உரம் 60 கிலோ, யூரியா இரண்டேகால் கிலோ, சூப்பர் ஒன்றரை கிலோ, பொட்டாஷ் 3 கிலோ, வேப்பம்புண்ணா க்கு 5 கிலோ இட வேண்டும். மேற்கண்ட உர பரிந்துரை அளவை சமப்பங்காக பிரித்து வருடத்தில் இருமுறை இட வேண்டும். அதாவது மார்கழி, தை மாதங்களில் ஒரு முறையும், ஆனி, ஆடி மாதங்களில் ஒரு முறையும் இட வேண்டும். மேற்கண்ட உரங்களை இட்ட 30 முதல் 45 நாட்கள் கழித்து தென்னை நுண்சத்து உரத்தை மரம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் இட வேண்டும். இவ்வகை உரங்களை மரத்தை சுற்றி 5 அடி தூரத்தில் இட்டு மண்ணை கிளறிவிட்டு உடனடியாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும். முறையாக உரமிட்டால் குரும்பை உதிர்தல், ஒல்லிக்காய், காய்களில் வெடிப்பு, நீளவடிவிலான வெற்றுகாய்கள் பிரச்னை குறைந்து ஆண்டுக்கு சராசரியாக 150 முதல் 200 தேங்காய்கள் வரை மகசூல் எடுக்க முடியும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஏ.சித்தூர் தனியார் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளுக்கு ரூ.40 கோடியை வழங்க வேண்டும் கோட்டாட்சியர் செந்தில்குமார் உத்தரவு</u>**



விருத்தாசலம், கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.40 கோடியை ஏ.சித்தூர் தனியார் சர்க்கரை ஆலை உடனே

வழங்க வேண்டும் என்று என்று கோட்டாட்சியர் செந்தில்குமார் உத்தரவிட்டுள்ளார்.

<u>பேச்சுவார்த்தை</u>

விருத்தாசலம் ஏ.சித்தூரில் தனியார் சர்க்கரை ஆலை, சுமார் 3 ஆயிரத்து 500 கரும்பு விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.40 கோடி வரை நிலுவைத்தொகை வழங்க வேண்டியதுள்ளது. இந்த நிலுவை தொகையை வழங்கக்கோரி வருகிற 15–ந் தேதி முதல் தொடர் போராட்டம் நடத்தப்போவதாக திருமுதுகுன்றம் கரும்பு உற்பத்தியாளர் விவசாயிகள் சங்கத்தினர் அறிவித்தனர். இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த விவசாயிகளுக்கும், கரும்பு ஆலை அதிகாரிகளுக்கும் கோட்டாட்சியர் அழைப்பு விடுத்திருந்தார். அதன்படி நேற்று காலை விருத்தாசலம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் செந்தில்குமார் தலைமையில் பேச்சுவார்த்தை நடந்தது.

<u>தொகையை வழங்க உத்தரவு</u>

அப்போது விவசாயிகள் கூறுகையில், நிலுவை தொகை கேட்டு போராடி வருகிறோம். எங்களது கோரிக்கைகளில் ஒரு சதவீதம் கூட நிறைவேற்றப் படவில்லை. விவசாயிகள் கடன் மேல் கடன் வாங்கி அழிந்து வருகிறார்கள். தற்போது, வங்கிகளில் கூட விவசாயிகளை நம்பி கடன் வழங்குவதில்லை என்றனர். இதேபோல் ஆலை அதிகாரிகளும், தங்களது கருத்தை தெரிவித்தனர். பின்னர் கோட்டாட்சியர் செந்தில்குமார் பேசுகையில், விவசாயிகளுக்கு சென்றடைய வேண்டிய தொகையை வழங்காமல் அலைக்கழிப்பது ஏற்க முடியாத ஒன்றாகும். விவசாயிகள் கரும்பு தொகை மூலமாக கிடைக்கும் பணத்தை நம்பி தான் வாழ்க்கை இருக்கிறது. ஆகையால் உடனடியாக நிலுவைத்தொகையை வழங்க வேண்டும் என்றார்.

<u>தொடர் போராட்டம்</u>

அதற்கு ஆலை அதிகாரி பிரபாகரன், ஆலை நிர்வாக அதிகாரிகளுடன் பேசி இன்னும் 2 நாட்களில் நிலுவைத்தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதை ஏற்றுக்கொண்ட விவசாயிகள், நிலுவைத்தொகை

வழங்காவிட்டால் தொடர் போராட்டம் நடத்தப்படும் என்று கூறிவிட்டு கலைந்து சென்றனர்.